Tamil Short Story - First Prize

நடராசன் சரவணன் (Natarajan Saravanan)

தீம்பால் பெய்து (Nursed with Sweet Milk)

அன்று பக்கத்து வீட்டு கென் தொலைபேசியில் குமரனைத் தொடர்புகொண்டு “உன் அம்மா பொதுப்பணித்துறை அலுவலர்களுடன் சண்டையிட்டுக் கொண்டுள்ளார்” என்று சொன்ன போது குமரனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவரிடமே “அங்கிள் எனக்கு அம்மாவை போன் பண்ணச் சொல்லுங்க” என்று சொல்லிவிட்டுப் போனை வைத்தான்.

சற்று நேரத்தில் தொலைபேசியில் அம்மா அழைக்க,” அங்கு என்னம்மா பிரச்சினை” என்றான் குமரன்.

“அது ஒன்னும்மில்ல நீ எதுக்குப் போன் பண்ணச் சொன்ன?”

“ஒன்னுமில்லாமதான் எல்லோரும் கூடி வேடிக்கைப் பார்த்தாங்களா?’

“அதுக்குள்ள உனக்குச் சேதி வந்துட்டா”

“ஏம்மா இப்படிப் பண்றீங்க எத்தனை தடவை சொல்லியாச்சு இந்த மாதிரி சண்டை போடாதிங்கன்னு…சொன்னா கேக்குறிங்களா?”

“என்னால அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது அதை விடு பிள்ளைகள் எப்படி இருக்கிறார்கள்?”

“நான் அப்புறமா பேசறேம்மா ஆபிஸ்ல ரொம்பப் பிஸிமா”என்று போனை வைத்தான் குமரன்.

இது இன்று நேற்றல்ல நாற்பது வருடங்களாக நடக்கும் கதை. செல்லம்மாள் இவருக்கு இரண்டு மகன்கள் மூத்த மகன் விநாயகம் இளைய மகன் குமரன். இருவரும் திருமணமாகி தனித்தனியே வசிக்கின்றனர். கணவர் இறந்து சில வருடங்களாகி விட்டது. அவர்களின் பரம்பரைச் சொத்தான தரை வீட்டில் செல்லம்மாள் மட்டும் தனியே வசித்து வருகிறார். மகன்கள் இருவரும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அந்த வீட்டை விட்டு வர மறுத்துவிட்டார். வீட்டு வாசலில் இரண்டு புங்கை மரங்கள். மகன்கள் இருவருக்கும் இருக்கும் மிகப் பெரிய பிரச்னையே அந்த மரங்கள்தான். யாராவது அந்த

மரங்களில் கை வைத்து விட்டால் செல்லம்மாவுக்குப் பொல்லாக் கோபம் வந்து விடும். அப்படி ஒரு பாசம் அந்த மரங்கள் மீது. காலை நேரங்களில் அந்த மரத்தில் அமர்ந்துக் கூவும் ஒற்றைக் குயிலின் குரலை ரசிப்பதும், அவற்றில் ஒரு மரத்தில் கட்டியிருந்த சிட்டுக்குருவிக் கூட்டிலிருந்து வரும் குஞ்சுகளின் சந்தங்களையும் ரசிப்பதும், அம்மரங்களின் அருகில் நின்று மரத்தைத் தொட்டுப் பேசுவதும் அன்றாட நிகழ்ச்சிகள். புதிதாக அந்தப்பக்கம் வருகிறவர்களுக்கு அது சற்று வித்தியாசமானக் காட்சியாகும். சிலர் அந்தம்மா ஒரு மாதிரி என்று நெற்றிப் பொட்டில் கை வைத்துக் காட்டுவோரும் உண்டு.சிலர் மருந்துக்காக வேண்டும் என்று புங்கம் விதைகளைப் பொறுக்க வரும்போது, இப்படி அமுக்கிப் பார்த்து எடுத்துட்டுப் போங்க என்று சொல்லுவார். பிள்ளைகள் இடுப்பில் கட்டினால் ஆஸ்துமா வாராது என்று மருத்துவக் குறிப்பும் சொல்லியனுப்புவார்.

பக்கத்து வீட்டு கென் இந்த மரங்கள் எப்போது இந்த இடத்தில் இல்லாமல் போகும் அல்லது வெட்டுவார்கள் என்று ஆவலுடன் காத்துக்கொண்டிருப்பவர். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அந்த மரங்களின் காய்ந்த சருகுகள் அவர் வீட்டு வாசலில் விழுந்து கிடப்பதைப் பார்க்கும்போதெல்லாம் அவருக்குக் கோபம் வரும், ஆனால் நீண்ட நாள் பழக்கம் என்பதால் பொறுத்துக்கொள்ளவார். அவ்வப்போது செல்லம்மாளின் நடமாட்டத்தைப் பிள்ளைகளுக்குச் சொல்வதும் அவர்தான்.

செல்லம்மாளுக்கு அந்த மரங்களைத் தொடும்போது தன் இளமை கால நினைவுகளில் மூழ்கிவிடுவார்..

இப்போது உள்ளது போல் சாலை மற்றும் மின்சார வசதிகள் அப்போது இல்லை. ஆனால் அப்போது உள்ள மகிழ்ச்சி இப்போது இல்லை…

நடராசன், அவரின் மாமா மகன் மூன்று வயது மூத்தவர். அவரின் வீடு ஜாலன் காயுவிலிருந்தது. செல்லம்மாளின் வீடு சிராங்கூன் கார்டன் பகுதியில் இருந்தது. வார இறுதியில் நடராசன் இங்குதான் இருப்பார். இருவரும் விளையாடிய வீடுதான் இது. அப்போது நடராசன் புங்கை மரக் கொட்டையை இடுப்பில் கட்டியிருப்பான். அதைப் பார்த்து எனக்கும் வேண்டும் என்று செல்லம்மாள் கேட்க எங்கோ சென்று தேடி கைநிறைய கொண்டு வந்தான். அவர்கள் கிச்சு கிச்சுத் தாம்பாளம் விளையாட அந்தக் கொட்டையைக் கொண்டு விளையாடுவார்கள். அவ்வாறு ஒரு நாள் செல்லம்மாள் ஒளித்துவைத்த

கொட்டையை நடராசன் கண்டு பிடிக்க முடியாமல் போகவே மிகவும் வருந்தினான். அச்சமயம் மழை வரவே விளையாட்டு முடிந்தது. மழை ஒரு வாரம் தொடர்ந்தது...சில நாட்கள் கழித்துச் செல்லம்மாள் ஒளித்து வைத்த இடத்தைப் பார்த்தபோது அவ்விதைகள் நன்றாக முளைத்திருந்தன. அன்று விளையாட்டில் தோற்றுப்போன நடராசனின் முகம் ஞாபகத்திற்கு வரவே சிரிப்பு வந்தது...அந்தச் சிரிப்பே அவர் மீது அன்பாக மாறியது. முளைத்த விதைகளுக்குத் தினமும் நீரூற்றியதுடன் அதனைச் சுற்றி கற்களை வைத்துப் பாதுகாக்க ஆரம்பித்தார். இதனையறிந்த அவரின் தந்தை அந்த இளம் கன்றுகளின் நம்பிக்கையில் பால் வார்த்தார். இரண்டு கன்றுகளை வீட்டின் வாசலில் இருபுறமும் வைத்து ஒன்று நடராசனுடையது என்றும் மற்றொன்று செல்லமாளுடையது என்றும் சொல்லிவிட்டார்.

செல்லம்மாவால் மரங்கள் கண்ணும் கருத்துமாக வளர்க்கப்பட்டன. மரங்கள் வளர்ந்தது போலவே செல்லமாள் நடராசன் காதலும் வளர்ந்தது. இருமனம் கலந்து திருமணத்தில் இணைந்தார்கள்...அவரின் தந்தையின் விருப்பபடி இருவரும் அந்த வீட்டிலேயே வசித்தனர். செல்லம்மாள் அந்த மரங்களைத் தன் கணவரிடம் திருமணத்திற்கு முன்னாலேயே நமக்குப் பிறந்த குழந்தைகள் இவை என்று சொல்லும்போது, சிரித்துக்கொண்டே ஆமோதிப்பார். மரங்கள் இரண்டும் மேலோங்கி வளர்ந்தன. மரமும் விலங்குகளும் இருக்கும் நிலம் வளமான பூமியாக மாறி பசுமை கொஞ்ச ஆரம்பிக்கிறது. ஒரு சில நாட்கள் மனிதன் ஒரே பாதையில் நடந்தால் அந்தப் பாதையில் உள்ள புற்கள் கூட காய்ந்துவிடுகின்றன..மனிதர்களை விட மரங்கள் உயரமானவை உயர்வானவை...

விநாயகமும் குமரனும் சிறுவர்களாக இருந்தபோது அந்த மரங்களில் தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவார்கள். அவர்களுடைய விளையாட்டுப் பொருட்களை அம்மரங்களில் அடியில் வைத்துக் கொள்வார்கள். அம்மரங்கள் குடைபோல இருந்ததால் அங்கு இளைப்பாறும் மனிதர்கள், பசுக்கள் என்று ஒரு ரசிகர் கூட்டமே இருந்தது.

மரங்கள் உலகின் பொதுவுடைமை இல்லங்கள், எந்தப் பறவைக்கும் இடத்தை வாடகைக்கும் விடுவதில்லை கூறு போட்டு விற்கவும் இல்லை...முன்னேற்றம் என்ற பெயரில் இயற்கையை அழிக்கத்தொடங்கி... தாயைவிட்டு வெகுதூரம் வந்துவிட்ட குழந்தை திரும்பிச் செல்ல வழிதெரியாது கண்ணீர் வடிப்பது போன்ற நிலையில்தான் இன்றைய மனிதன் இருக்கின்றான்.

குமரனுக்கு அன்று பொதுப்பணித்துறை அதிகாரியிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. கென் தொலைபேசி எண்ணைக் கொடுத்திருப்பார் என்று குமரன் நினைத்தான். அவர் குமரனிடம், அம்மா மரத்தின் மீது அதிகப் பற்று வைத்துள்ளார். அதனால் எங்களை வெட்ட விடுவதில்லை. அவ்வாறு வெட்டாமல் விட்டால் மரங்கள் மழைநேரத்தில் கீழே சாய்ந்துவிடும் என்பதைக் கூறி அம்மாவிடம் புரியவைக்கச் சொன்னார். மேலும் உங்கள் அம்மா நம் முதல் பிரதமர் சிங்கப்பூரைப் பசுமை தேசமாக மாற்ற எண்ணியபோது அத்திட்டத்தைப் பொதுமக்களிடம் கொண்டுசேர்க்கும் நோக்கில் தன்னார்வத் தொண்டராகவும் பணியாற்றியவர் என்பதால் அவரிடம் எங்களுக்கு மிகுந்த மரியாதை உண்டு என்றும் நினைவுகூர்ந்தார். நீங்கள் சொல்வது உண்மைதான், அம்மா அம்மரங்களின் மீது அளவு கடந்த அன்பு வைத்துள்ளார், தன் பிள்ளைகள் போல நினைக்கிறார் அதுதான் அதற்குக் காரணம், நான் அம்மாவிடம் இது பற்றிப் பேசுகிறேன் கூறிவிட்டுப் போனை வைத்துவிட்டு அம்மாவிடம் எப்படிப் பேசி புரிய வைப்பது என்று யோசனையில் குமரன் மூழ்கினான். இதைப்பற்றி அண்ணன் விநாயகத்திடம் இன்றிரவு பேச வேண்டும் என்று முடிவு செய்தான். ஆனால் அன்றிரவு அதனைச் சுத்தமாக மறந்தும் போனான்.

சில சமயம் திடீரென்று ஒரு கிளையில் குருவிகள் இரண்டு சேர்ந்து கூடு கட்டும்போது செல்லமாளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். கட்டுங்க கட்டுங்க, புதுசா குடிவரிங்களா? என்று பேசிக்கொண்டிருப்பார். சில நாட்கள் கழித்து அந்தக் கூட்டிலிருந்து குருவிக் குஞ்சுகளின் சத்தம் கேட்க ஆரம்பித்தவுடன் அவரிடம் ஒரு மெல்லிய சோக உணர்வு தோன்றும். அதற்குக் காரணமும் உண்டு, குருவிகள் கூடு கட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து அவை வளரும் வரை உணவூட்டி, பின் அவை வளர்ந்த பின் கூட்டைவிட்டுப் பறந்தபின், இவைகளும் கூட்டைவிட்டுவிட்டுச் சென்று விடுகின்றன. இதன் காரணம் செல்லமாளுக்கு ஒரு புரியாத புதிராகவே இருந்தது. ஒருவேளை குஞ்சுகளுடன் பெரிய மரமாகப் பார்த்து கூடு கட்டிச் சென்றுவிட்டனவோ? என்று நினைக்கும் போதே, தானும் பிள்ளைகளுடன் சென்றிருக்கலாமோ? என்று எண்ணுவதும் உண்டு. ஆனால் தான் இறக்கும்வரை இந்த இரண்டு மரங்களையும் விட்டுச் செல்லமாட்டேன் என்று தன் கணவருக்குக் கொடுத்த வாக்கை நினைக்கும்போது, அந்த எண்ணம் மாறிவிடும்.

அன்று மாலையிலிருந்து காற்றும் மழையும் அடிக்கத்தொடங்கியது...இரவெல்லாம் மழை ஓயவேயில்லை.இப்படித்தானே அன்றும் மழை பெய்தது என்ற இனிமையான நினைவுடன் தன் திருமணப் புகைப்படத்தை வெகுநேரம் கையில் வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார். ..விடிந்த பிறகு வானம் பளிச்சென்று இருந்தது. ஆனால் எங்கும் ஓர் இனம் புரியாத அமைதி நிலவியது. கென் தன் மனைவியிடம் அந்தம்மாவைக் காலையிலிருந்து பார்க்கவில்லை நீ பார்த்தாயா என்று கேட்க, அவரும் இல்லையே என்று சொன்னார். கென் ஒரு வித பதற்றத்தோடு குமரனுக்குப் போன் செய்ய ஆரம்பித்தார்.

கொஞ்ச நேரத்திற்குள் அங்கு ஒரு பெரிய கூட்டம் அங்கே கூடிவிட்டது. கதவு உள்பக்கம் தாழ்பாள் போடப்பட்டிருந்ததால் கதவு உடைக்கப்பட்டு உள்ளே சென்று பார்த்தபோது, திருமணப் புகைப்படத்தைத் தன் மார்பில் அணைத்தபடி சிரித்த முகத்துடன் செல்லம்மாள் இறந்துபோயிருந்தார்.... வாழ்வில் ஒவ்வொருவரும் எதிர்பார்க்காத தருணம்...இறப்பை யாரும் விரும்புவதில்லை ஆனால் எந்தச் சிரமமும் இன்றி யாருக்கும் தொல்லைத் தராத மரணம் அனைவரும் விரும்பும் ஒன்று...அது எல்லோருக்கும் அமைவதில்லை...செல்லமாளுக்கு அமைந்தது.

உறவினர்கள் ஒருவர் பின் ஒருவாராக வந்து சேர்ந்தனர்...விநாயகமும் குமரனும் சோகமே உருவாக அமர்ந்திருந்தனர்...மூன்று மில்லியன் போகும்...ஆளுக்குப் பாதி நினைக்கவே பெருமகிழ்ச்சியாக இருந்தது விநாயகத்துக்கு...

அம்மாவை அடிக்கடி வந்து பார்த்துப் பேசியிருக்கலாம்...அம்மா எங்களுக்காகப் பட்ட சிரமங்களை யாரும் பட்டிருக்க முடியாது...அப்பா காலையில் வேலைக்குச் சென்ற பின் எங்கள் இருவரையும் குளிப்பாட்டுவதிலிருந்து பாடம் சொல்லிகொடுத்துப் பள்ளியில் கொண்டு விட்டுப் பின் அழைத்து வந்து எங்களோடு விளையாடுவது வரை எவ்வளவு வேலை...இன்று நானோ என் மனைவியோ அதில் பாதிகூடச் செய்வதில்லை...சொல்லப் போனால் எங்களுடன் குழந்தைகள் இருப்பதைவிடப் பணிப்பெண்ணுடன்தான் அதிக நேரம் இருக்கிறார்கள்...படிப்பு பதவி பணம் என்று தேடவே பாதி வாழ்க்கை முடிந்துவிடுகிறது...வாழ ஆரம்பிக்கலாம் என்று நினைக்கும்போது வாழ்வு முடிந்து போகிறது...என்ன ஒரு வாழ்க்கை...

இந்த வீட்டை விற்காமல் ஓர் இயற்கை வாழ்வு விழிப்புணர்வு கூடமாக மாற்றி விடலாமா? என்ற யோசனை வந்தது குமரனுக்கு, அதைப் பற்றி அப்புறம் வினாயகத்திடம் பேசவேண்டும் என்ற நினைத்தான் குமரன்.

விநாயகத்தின் மனைவி வினாயகத்தைத் தனியே அழைத்து, "அடுத்த மாதம் என் தங்கையின் திருமணம் அதனால நீங்க கொள்ளி மட்டும் வைங்க மொட்டையெல்லாம் போட்டுக்க வேணாம்.., வேணும்னா உங்க தம்பியைப் போட்டுக்கச் சொல்லுங்க" என்றாள்.

இதைக் கேட்ட குமரனின் மனைவி, "எனக்கு அடுத்த மாதம் அமெரிக்காவுல ஒரு மீட்டிங் இருக்கு அதனால முடியாதுன்னு சொல்லுங்க"என்று காதில் கிசுகிசுத்தாள்.

பிள்ளைகளும் கவலைப்பட்டார்கள் அவர்கள் மனைவிகளும் கவலைப்பட்டார்கள்...இரு கவலைகளும் வேறுபட்டவை... எங்களைப் பெற்ற தாய்க்கு நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று எங்களுக்குத் தெரியும். நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள் என்று சொல்ல வந்தான் குமரன் ஆனால் சொல்லவில்லை. அப்படிச் சொன்னால் என்ன நடக்கும் என்று அவனுக்கு நன்றாகவே தெரியும். அதனால், "தாய்க்குத் தலைப்பிள்ளை தகப்பனுக்குக் கடைசிப் பிள்ளை... என் கடமை எப்போவோ முடிஞ்சு போச்சு...அண்ணன் என்ன நினைக்கிறாரோ..அப்படியே செய்யட்டும்..." என்றான் குமரன்.

புராண காலத்தில் இருந்து நம்மிடையே மொட்டைப் போடும் பழக்கம் இருந்து வருகிறது. அனைத்து மதத்தினரிடமும் இப்பழக்கம் உள்ளது. ஒவ்வொரு தடவை மொட்டை போடும் போதும் மறு பிறவி எடுப்பதாகக் கருதப்பட்டது. கணவனோடு உடன் கட்டை ஏறிய பெண்கள், உடன்கட்டை ஏறுதல் தடைசெய்யப்பட்டதும் நாளடைவில் மொட்டை மட்டும் போட்டுக் கொண்டனர்... நம்மிடையே நிறையப் பழக்கவழக்கங்கள் இருக்கின்றன. அவற்றை ஏன் செய்ய வேண்டும் என்று தெரியாமலே கண்மூடித்தனமாகப் பின்பற்றுகிறோம்.

பந்தல் போட ஏற்பாடு ஆயிற்று...பந்தல் போட மரங்கள் இடைஞ்சலாக இருக்கவே அவற்றை ஓரளவு வெட்டினால் தான் பந்தல் போடமுடியும் என்ற நிலையில்....குமரா மரங்களைக் கொஞ்சம்

வெட்டினால்தான் பந்தல் போடமுடியும் வெட்டவா? என்று ஒரு குரல் கேட்க... ஆளே போயாச்சு மரம் இருந்து என்ன ஆவப்போவது? என்றது மற்றொரு குரல்....

கொஞ்ச நேரத்தில் மரங்கள் இரண்டும் மொட்டையடித்துக்கொள்ள ஆரம்பித்தன....

**-முற்றும்-**

மொத்த வார்த்தைகள்:1157